# கிழக்கு மாகாண பொதுச்சேவையின் படவரைஞர் தரம் III மற்றும் பயிற்சித்தரம் ஆகிய பதவிகளுக்கு மாகாண ரீதியான புள்ளிகளின் முன்னுரிமை வரிசை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை – 2026

கிழக்கு மாகாண பொதுச்சேவையின் படவரைஞர் தரம் III மற்றும் பயிற்சித்தரம் ஆகிய பதவிகளுக்கு மாகாண ரீதியான புள்ளிகளின் முன்னுரிமை வரிசை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சைக்காக கீழே குறிப்பிடப்பட்ட தகைமைகளை பூர்த்தி செய்த கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி **2026.03.06** ஆகும். இப்பரீட்சையானது கிழக்கு மாகாணத்தின் நான்கு நகரங்களில் செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் நடாத்தப்படும்.

2. **ஆட்சேர்ப்புக்கான சேவை நிபந்தனைகள்:**

2.1. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும். தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் வகுக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு தாங்கள் கீழ்ப்படிதல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்ட விதிகளுக்கு அமைய சேவை நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும்.

2.2. இவ்வறிவித்தலுக்கமைய விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்காக செயலாளர், கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் எழுத்துமூல போட்டிப்பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளின் முன்னுரிமை வரிசை அடிப்படையில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு ஏற்ப நேர்முகப்பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

2.3. இந்நியமனம் பெறுபவர்கள் கிழக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும் என்பதோடு கிழக்கு மாகாணத்தில் முதல் 10 வருடங்கள் கட்டாயமாக சேவையாற்றுதல் வேண்டும்.

2.4. மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்குரிய தகைமைகளை பூர்த்தி செய்த கிழக்கு மாகாண சேவையில் ஏற்கனவே உள்ளவர்கள் விண்ணப்பிப்பதாயின் திணைக்களத்தலைவரூடாக விண்ணப்பித்தல் வேண்டும். அவ்வாறு விண்ணப்பிக்கும் போது மேலே குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படுமிடத்து அவரை குறித்த பதவிக்கு விடுவிக்க முடியும் என அத்திணைக்களத்தலைவர் உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதுடன், திணைக்களத்தலைவரினால் விடுவிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்படாத விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகள் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து, இது அவர்களது புது நியமனமாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

3. **தகைமைகள்:**

3.1. **பொதுவான தகைமைகள் :**

3.1.1. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

3.1.2. சிறந்த நல்லொழுக்கமும் சிறந்த உடல் உள ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

3.1.3. 2026.03.06ஆந் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

3.1.4. விண்ணப்பமுடிவுத் திகதிக்கு உடன் முன்னராக குறைந்தது மூன்று (03) வருடமாவது தொடர்ச்சியாக கிழக்கு மாகாணத்தில் வசித்திருப்பதோடு அதற்குரிய ஆவணங்களை சமர்ப்பிக்க கூடியவராக இருத்தல் வேண்டும்.

**அல்லது**

3.1.5. விண்ணப்ப முடிவுத் திகதிக்கு உடன் முன்னதாக குறைந்தது மூன்று வருடங்களாவது (03) தொடர்ச்சியாக கிழக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாக கொண்ட ஒருவரை திருமணம் செய்து வேறு மாகாணத்திலிருந்து விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் இந்த மாகாணத்திலுள்ள கிராம சேவகர் பிரிவிற்கு நிரந்தர வதிவிடத்தை மாற்றிக் கொண்டமை தொடர்பான அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஆவணமொன்றை சமர்ப்பிக்கக்கூடிய ஒருவராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு : மேலே 3.1.4 இன் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் வதிவிடத்தை அத்தாட்சிப்படுத்துவதற்காக விண்ணப்பமுடிவுத் திகதிக்கு அண்மித்த மூன்று (03) வருடங்களுக்கான தேருநர் இடாப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரித்தெடுப்பிதழ்களுடன் பிரதேச செயலாளரினால் மேலொப்பம் இடப்பட்ட கிராம உத்தியோகத்தர் சான்றிதழையும் நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமானதாகும்.**

3.1.5இன் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தனது வதிவிடத்தை அத்தாட்சிப்படுத்துவதற்காக பிரதேச செயலாளரினால் மேலொப்பம் இடப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழுடன் தனது துணையின் வதிவிடத்தை அத்தாட்சிப்படுத்துவதற்காக அண்மித்த மூன்று (03) வருடங்களுக்கான தேருநர் இடாப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரித்தெடுப்பிதழ்களுடன் பிரதேச செயலாளரினால் மேலொப்பம் இடப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழையும் நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்கும் கடப்பாடுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

3.1.6. எந்தவொரு மத அமைப்பிலும் நியமிக்கப்பட்ட எந்தவொரு நபரும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையற்றவர் ஆவார்.

3.2 **கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகள்**

| பதவிப் பெயர் | கல்வித் தகைமைகள் | தொழில்சார் தகைமைகள் |
|---|---|---|
| படவரைஞர் தரம் III | 3.2.1. கல்விப் பொதுத்தராதர (சா/த)ப் பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்கள மொழி / தமிழ் மொழி / ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஏனைய ஒரு (01) பாடத்தில் திறமைச் சித்திகளுடன் (04 திறமைச்சித்தி) ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**அல்லது**<br>மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட ஒரு மூன்றாம் நிலை அல்லது தொழில்நுட்ப கல்வி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட தேசிய தொழிற்தகைமை (NVQ) **மட்டம் 3** சான்றிதழ்.<br><br>**அத்துடன்**<br>3.2.2. கல்விப் பொதுத்தராதர (உ/த) பரீட்சையில் விஞ்ஞானம் / கணிதம் / தொழில்நுட்பம் பிரிவுகளில் மூன்று (03) பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருப்பதோடு இதில் இணைந்த கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல், விவசாயம் அல்லது உயிரியல் ஆகிய பாடங்களில் இரண்டு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**அல்லது**<br>பந்தி 3.2.2இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களைத் தவிர கல்வி பொதுத்தராதர (உ/த) பரீட்சையில் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் அத்துடன் மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொழில்நுட்பக் கல்லூரியிலிருந்து பொருத்தமான பதவிக்குத் தொடர்புடைய துறையில் தேசிய தொழில்நுட்ப சான்றிதழை (NCT) பெற்றிருத்தல் வேண்டும். (உதாரணமாக: சிவில் தொழில்நுட்பம் / மின்சாரத் தொழில்நுட்பம் / இயந்திரத் தொழில்நுட்பம் ஆகியவற்றிலான தேசிய தொழில்நுட்ப தேசிய சான்றிதழ்)<br><br>**அல்லது**<br>மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவியால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட ஒரு மூன்றாம் நிலை அல்லது தொழில்நுட்ப கல்வி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட தேசிய தொழிற்தகைமை (NVQ) **மட்டம் 4** சான்றிதழ். | (அ) மொரட்டுவைப் பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி தொழில்நுட்பக் கல்லூரியினால் வழங்கப்பட்ட தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமாவைப் பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**அல்லது**<br>(ஆ) தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையினால் (NAITA) வழங்கப்பட்ட தேசிய பொறியியல் டிப்ளோமாவைப் பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**அல்லது**<br>(இ) கல்வி, உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட உயர் தேசிய பொறியியல் டிப்ளோமாவைப் பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**அல்லது**<br>(ஈ) திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட தொழில்நுட்பவியல் டிப்ளோமாவை பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**அல்லது**<br>(உ) இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற பொறியியல் பரீட்சையில் பகுதி Iயை பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.<br><br>**அல்லது**<br>(ஊ) விடயத்துடன் தொடர்புபட்ட தேசிய தொழிற் தகைமைகள் மட்டம் 6இனை பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.<br><br>**அல்லது**<br>(எ) மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட மேலே குறிப்பிட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு சமனான வேறு ஏதேனும் தொழில்நுட்ப தகைமையை பெற்றிருத்தல். |

| | | |
|---|---|---|
| படவரைஞர் பயிற்சித் தரம் | 3.2.3. கல்விப் பொதுத்தராதர (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்கள மொழி / தமிழ் மொழி / ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஏனைய ஒரு (01) பாடத்தில் திறமைச் சித்திகளுடன் (04 திறமைச் சித்தி) ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**அல்லது**<br>மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவியால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட ஒரு மூன்றாம் நிலை அல்லது தொழில்நுட்ப கல்வி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட தேசிய தொழிற்தகைமை (NVQ) **மட்டம் 3** சான்றிதழ்.<br><br>**அத்துடன்**<br>3.2.4 கல்விப் பொதுத்தராதர (உ/த) பரீட்சையில் ஏதேனும் ஒரு பாடத்துறையில் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br><br>**அல்லது**<br>மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவியால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட ஒரு மூன்றாம் நிலை அல்லது தொழில்நுட்ப கல்வி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட தேசிய தொழிற்தகைமை (NVQ) **மட்டம் 4** சான்றிதழ். | (அ) மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொழில்நுட்பக் கல்லூரியிலிருந்து பொருத்தமான பதவிக்குத் தொடர்புடைய துறையில் தேசிய தொழில்நுட்ப சான்றிதழை (NCT) பெற்றிருத்தல் வேண்டும். (உதாரணமாக: சிவில் தொழில்நுட்பம் / மின்சாரத் தொழில்நுட்பம் / இயந்திரத் தொழில்நுட்பம் ஆகியவற்றிலான தேசிய தொழில்நுட்ப சான்றிதழ்).<br><br>**அல்லது**<br>(ஆ) மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியிலிருந்து படவரைஞர் (Draftsmanship) துறையில் ஒரு வருட கால முழுநேரப் பாடநெறியை பூரணப்படுத்திய சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**அல்லது**<br>(இ) மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் பதவிக்குத் தொடர்புடைய ஒரு துறையில் கைத்தொழில் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய சான்றிதழ் பாடநெறியை (NCIT) வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து, அதற்குரிய சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**அல்லது**<br>(ஈ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பத் தகைமைகளுக்கு சமமானதாக மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட வேறேதேனும் தொழில்நுட்பத் தகைமைகளைக் பெற்றிருத்தல் வேண்டும். |

4. **ஆட்சேர்ப்பு முறை :**

4.1. கிழக்கு மாகாணத்தில் அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்டம் மற்றும் அரச பொது நிர்வாக சுற்றறிக்கைகள் மற்றும் மேலே 2.2 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஆட்சேர்ப்பு செய்யப்படும். அத்துடன் எழுத்து மூலப் பரீட்சையின் பெறுபேறுகளின் முன்னுரிமை வரிசை அடிப்படையிலும் நிலவும் வெற்றிடங்களின் அடிப்படையிலும் விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் பரீசிலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையென நேர்முகப்பரீட்சையில் தெரியவருமிடத்து இப்பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். நேர்முக பரீட்சைக்கு புள்ளிகள் எவையும் வழங்கப்பட மாட்டாது.

4.2. அனைத்து விண்ணப்பதாரிகளும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னதாக பதவிக்கு ஏற்புடைய அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியிருத்தல் அவசியமானதாகும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் கோரப்பட்டுள்ள தகைமைகளுக்குரிய பரீட்சைப் பெறுபேறுகள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பெறுபேறுகளை எதிர்பார்த்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் தவறொன்றாக கருதப்படும் என்பதுடன் தகுதியற்றவர்களின் விண்ணப்பங்களும் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

4.3. எழுத்து மூலப் பரீட்சையில் சித்திபெற்று அத்துடன் நேர்முகப் பரீட்சையிலும் தமது தகைமைகளை நிருபித்த விண்ணப்பதாரர்கள் கிழக்கு மாகாண பொதுச்சேவையின் படவரைஞர் தரம் III பதவிக்கு அமர்த்தப்படுவார்கள். இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் 2025.03.25ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை 10/2025இற்கு அமைவாக இருக்கும் என்பதோடு இந்த நியமனத்திற்கான சம்பள முறைமை MN3-2025 சம்பள வகுதியின் கீழ் மாதாந்தம் ரூபா. 52,250 – 10 x 800 – 11 x 1,190 – 10 x 1,320 – 10 x 1,350 – 100,040/- இன் படி குறித்த சுற்றறிக்கையின் உப அட்டவணை III இல் குறிப்பிட்டுள்ளவாறு சம்பளக் கொடுப்பனவு இடம்பெறும்.

கிழக்கு மாகாண பொதுச்சேவையின் படவரைஞர் பயிற்சித்தர பதவிக்கு அமர்த்தப்படுபவர்கள். இந்தப் பதவிக்கு உரித்தான சம்பள அளவுத்திட்டம் 2025.03.25ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை 10/2025இற்கு அமைவாக விதித்துரைக்கப்பட்ட வகையில் பயிற்சித்தர கொடுப்பனவாக மாதாந்தம் 43,274/- வழங்கப்படும்.

4.4. நிலவும் வெற்றிடங்களில் 70% திறந்த போட்டிப்பரீட்சை மூலமும், 30% மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலமும் நிரப்பப்படும். மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் மூலம் நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு தகுதியுள்ளவர்கள் காணப்படாதவிடத்து மிகுதி வெற்றிடங்கள் திறந்த போட்டிப்பரீட்சை மூலம் நிரப்பப்படும்.

4.5. படவரைஞர் தரம் III மற்றும் பயிற்சித்தரத்திற்கான ஆட்சேர்ப்பு நடைபெறும் சந்தர்ப்பங்களில், முதலில் படவரைஞர் தரம் IIIஇற்கே நியமனங்கள் வழங்கப்படும். அவ்வாறு தகுதிபெற்ற விண்ணப்பத்தாரர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாதவிடத்து, எஞ்சியிருக்கும் வெற்றிடங்கள் பயிற்சி தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கு பரிந்துரைக்கப்பட்ட தகுதிகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பத்தாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

4.6. திறந்த போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் பயிற்சித் தரத்திற்கு (படவரைஞர்) ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள், ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கமைய, பயிற்சிக் காலத்தினை திருப்திகரமாக நிறைவு செய்து அதன் பின்னர் இடம்பெறும் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதை உறுதிப்படுத்தி, கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சான்றிதழைச் சமர்ப்பிப்பதன் மூலம் தரம் IIIஇற்கு நியமனங்கள் வழங்கப்படும்.

பயிற்சியின் முடிவில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறும் பயிலுனர்களுக்கு, அவர்களது பயிற்சிக் காலத்தை மேலும் ஆறு (06) மாதங்களுக்கு மேற்படாமல் நீடிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். நீடிக்கப்பட்ட பயிற்சிக் காலத்தின் இறுதியில் மீண்டும் நடாத்தப்படும் பரீட்சையில் சித்திபெறாத திறந்த போட்டிப் பரீட்சையின் கீழ் விண்ணப்பித்த பயிலுனர்களின் சேவை முடிவுறுத்தப்படும். மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் கீழ் விண்ணப்பித்த பயிலுனர்கள் மீண்டும் அவர்களது முந்தைய பதவிகளுக்கே விடுவிக்கப்படுவர்.

5. **விண்ணப்பிக்கும் முறை :**

5.1. இவ்வறிவித்தலில் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய A4 (21cmx29cm) அளவிலான தாளின் இரு பக்கங்களையும் மட்டும் உபயோகித்து, இல 1.0 தொடக்கம் 4.2 வரை முதலாம் பக்கத்திலும், இல. 4.3 தொடக்கம் 10.0 வரை தாளின் இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்குமாறு விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

5.2. உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமையாதவையும், பிழையின்றி பூரணப்படுத்தப்படாதவையும், மாதிரி விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பரீட்சைக் குறியீட்டு இலக்கமின்றியும், உரிய திகதிக்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாதவையும், பரீட்சைக் கட்டணத்திற்கான பற்றுச்சீட்டின் மூலப்பிரதி ஒட்டப்படாதவையும் உரிய விண்ணப்ப முடிவுத்திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ சமர்ப்பிக்கப்படாதவையும், முழுமையுறாதவையுமான விண்ணப்பங்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யத்தவறுவதால் ஏற்படும் நட்டத்திற்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவர். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5.3. இப்பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை சத்தியப்பிரமாண ஆணையாளர், பரீட்சார்த்தியின் பிரிவிற்குரிய கிராம உத்தியோகத்தர், சமாதான நீதவான், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, ரூபா. 854,800/- ஆண்டுச்சம்பளத்தை அல்லது அதற்குக்கூடிய தொகையை வருடாந்த திரட்டிய சம்பளமாக பெறும் அரச அல்லது மாகாண சேவைச்சேர்ந்த நிரந்த பதவிநிலை உத்தியோகத்தர், முப்படையைச் சேர்ந்த பதவி நிலையிலுள்ள அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் அலுவலர், புத்த விகாரைக்குப் பொறுப்பாகவுள்ள பௌத்த விகாராதிபதி அல்லது தலைமை பிக்கு அல்லது வேறு மத பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள மதகுருமார், மதிப்பிற்குரிய வேறு சமயப் பெரியோர்கள் ஆகியோர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். **அரச / கிழக்கு மாகாண அரச சேவையிலுள்ள அலுவலரொருவர் விண்ணப்பிப்பதாயின்,** விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பமானது, திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர் / திணைக்களத்தலைவர் முன்னிலையில் இடப்பட்டு அதனை அப்பதவிநிலை உத்தியோகத்தர் / திணைக்களத்தலைவர் சான்றுப்படுத்தி திணைக்களத்தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்படுதல் வேண்டும்.

5.4. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் **2026.03.06**ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்ப இறுதித்திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். நீங்கள் அஞ்சல் செய்த விண்ணப்பம் தொலைந்து போனாலோ அல்லது காணாமல் போனாலோ அதற்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு பொறுப்பேற்கமாட்டாது. **(விண்ணப்பத்தை செயலாளரின் தனிப்பட்ட பெயருக்கு அனுப்புவதை தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்).**

செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம்,
கன்னியா வீதி, வரோதயநகர், திருகோணமலை.

5.5. விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் பரீட்சைக் குறியீட்டு இலக்கம் **EX/Rec/26/03** என்பதை குறிப்பிடுவதோடு **"படவரைஞர் தரம் III மற்றும் பயிற்சித் தரம் ஆகிய பதவிகளுக்கு மாகாண ரீதியான புள்ளிகளின் முன்னுரிமை வரிசையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2026"** என குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

5.6. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் முன் அனுமானத்துடன் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித்திகதியோ அல்லது அதற்கு முன்னரோ உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன், தவறின்றி பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவங்களை முன்வைத்த விண்ணப்பதாரிகளுக்கு மேற்படி பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்படும். பரீட்சைக்கு அனுமதி அட்டையை பெற்றுக்கொள்ளல் விண்ணப்பதாரி மேற்படி பதவிக்கான தகைமைகளைப் பெற்றுள்ளார் என ஏற்றுக்கொள்வதாக கருத முடியாது.

6. **பரீட்சைக்கு தோற்றுதல்:**

6.1. விண்ணப்பங்களை அனுப்பி வைத்த குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் முன் அனுமானத்துடன் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும் பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.

6.2. பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி இந்த விளம்பரத்தின் 5.3ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைவாக அனுமதி அட்டையில் தனது கையொப்பத்தை உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

6.3. பரீட்சையினை நடத்துதல் சம்பந்தமாக பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அந்த விதிமுறைகள் மீறப்படுமிடத்து கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் தண்டனைக்கு பரீட்சார்த்தி உட்படுதல் வேண்டும்.

7. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :**

தான் தோற்றும் அனைத்துப் பாடங்கள் தொடர்பில் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சை மண்டபத்தில் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக கீழ்க் குறிப்பிடப்படும் ஆவணங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை.

ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போட்).

இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

8. **பொய்யான தகவல்களை வழங்குவதற்குரிய தண்டனை :**

விண்ணப்பப்பத்திரங்களை பூர்த்தி செய்யும் போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சையின் முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் என தெரியவருமாயின், அவரின் பரீட்சார்த்தியுரிமை இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரியொருவர் சமர்ப்பிக்கின்ற ஏதேனும் தகவல் பொய்யானதென தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அல்லது சமர்ப்பிக்க வேண்டிய தகவலை வேண்டுமென்றே சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்திலும் அவர் மாகாண சேவையிலிருந்து நீக்கப்படலாம் அல்லது சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படலாம்.

9. **பரீட்சை முறையும் பரீட்சை மொழி மூலமும் :**

9.1. **எழுத்துப் பரீட்சை**

இப்பரீட்சை இரண்டு வினாப்பத்திரங்களை கொண்டமைவதோடு சிங்கள மற்றும் தமிழ் ஆகிய மொழிகள் மூலம் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| வினாத்தாள் | மொத்தப் புள்ளிகள் | நேரம் | சித்தியடைவதற்கான புள்ளி |
|---|---|---|---|
| நுண்ணறிவு | 100 | 01 மணித்தியாலம் | 40% |
| விடயம் தொடர்பான தொழில்நுட்பப் பரீட்சை | 100 | 02 மணித்தியாலங்கள் | 40% |

**நுண்ணறிவு** : இப்பரீட்சை மூலம் விண்ணப்பதாரியின் ஆக்கச்சிந்தனை, பகுப்பாய்வுத்திறன், நேர முகாமைத்துவம் மற்றும் பிரச்சினைக்கு தீர்வு காணும் திறன் ஆகியன பரீட்சிக்கப்படும்.

**விடயம் தொடர்பான தொழில்நுட்ப பரீட்சை** : இவ்வினாத்தாள் மூலம் பின்வரும் விடயங்கள் பரீட்சிக்கப்படும்.

1. நில ஆய்வு, இருப்பிட அடையாளம்
2. அளவீடுகளை எடுத்து வரைபடத்திட்டத்தை தயாரித்தல்
3. தேவைகளுக்கேற்ப திட்டங்களை தயாரித்தல்

9.2. பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகள் அனுப்பி வைக்கப்படும்.

10. **பரீட்சைக்கட்டணம் :**

பரீட்சைக்கட்டணம் ரூபா. 1000/- ஆகும். இக்கட்டணத்தை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதியோ அல்லது அதற்கு முன்னரோ செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம் எனும் பெயருக்கு கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள ஏதேனுமொரு பிரதேச செயலகத்தில் பரீட்சைக்கட்டணத்தை செலுத்தி அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை விண்ணப்பத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். பற்றுச்சீட்டுகள் ஒட்டப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். (பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றினை எதிர்கால தேவைக்காக தன் வசம் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீள செலுத்தப்படாததுடன் இப்பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சைகளுக்கு மாற்றுவதற்கும் இடமளிக்கப்படமாட்டாது. **அதேபோன்று காசுக் கட்டளைகளும் முத்திரைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

11. பரீட்சை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு :

| நகரம் | நகர எண் | நகரம் | நகர எண் |
|---|---|---|---|
| திருகோணமலை | 01 | அம்பாறை | 03 |
| மட்டக்களப்பு | 02 | கல்முனை | 04 |

**கவனிக்க :** ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திற்கு மாற்றப்படலாம்.

12. நேர்முகப்பரீட்சைக்கு குறித்த தினத்தில் சமூகமளிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளுக்கு பிறிதொரு தினத்தில் நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

13. தனது தகைமைகளை சான்றுப்படுத்துகின்ற சகல ஆவணங்களையும் நேர்முகப்பரீட்சைக்குழுவிற்கு நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிக்கும் தினத்திலேயே சமர்ப்பிக்க வேண்டும். நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்காத ஆவணங்கள் தொடர்பில் பின்னர் எக்காரணம் கொண்டும் கவனம் செலுத்தப்படமாட்டாது.

14. இந்த அறிவித்தலில் ஏதாவது திருத்தங்கள் தேவையானவிடத்து அது தொடர்பில் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணத்தினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும். அத்துடன் ஏதாவது விசேட காரணத்தினால் பரீட்சை நடாத்த முடியாமல் போகுமிடத்து அது தொடர்பான இறுதி முடிவும் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணத்தினால் எடுக்கப்படும். அதேபோன்று இப்பதவிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படும்போது, அவ்வெற்றிடத்தின் ஒரு பகுதியையோ அல்லது முழுமையாகவோ நிரப்புவது அல்லது நிரப்பாமல் விடுவது தொடர்பிலும் இறுதி முடிவு கௌரவ ஆளுநர் / கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கமைய நியமன அதிகாரியினால் மேற்கொள்ளப்படும்.

**ஜே. லியாகத் அலி**,
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.
11.02.2026

**EX/REC/26/03**

(அலுவலக உபயோகத்திற்கு)

மாதிரி விண்ணப்பப்படிவம்

## கிழக்கு மாகாண பொதுச்சேவையின் படவரைஞர் தரம் III மற்றும் பயிற்சித்தரம் ஆகிய பதவிக்கு மாகாண ரீதியான புள்ளிகளின் முன்னுரிமை வரிசை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை – 2026

***பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :***
தமிழ் - **T**, சிங்களம் - **S**
(உரிய எழுத்தை கூட்டினுள் இடவும்)

***பரீட்சைக்கு தோற்றும் நகர எண் :***
(11 வது பந்தியில் குறிப்பிடப்பட்ட பரீட்சை நகர இலக்கத்தைக் குறிப்பிடுக.)

**விண்ணப்பக்கும் பதவி :**
(தங்கள் தகைமைக்குப் பொருத்தமான பதவிக்கு எதிரே "✓" அடையாளமிடவும்)

**நிரந்தர வதிவிட மாவட்டம் :** ……………………………..

| | |
|---|---|
| படவரைஞர் தரம் III | |
| படவரைஞர் பயிற்சித்தரம் | |

1.0. 1.1 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர்:
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) (உதா : PERERA,A.B.C) ………………………………………….......…

1.2. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) : ……………………………..…….

1.3. முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ……………………………………………………………………….

1.4. பால் : ( பெண் - F / ஆண் - M
(உரிய எழுத்தை கூட்டினுள் இடவும்)

1.5. தொலைபேசி இல. : ……………………………………………………………………..................

2.0. 2.1. நிரந்தர முகவரி :- …………………………………………………………………….....................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

2.2. நிரந்தர முகவரி :- ……………………………………………………………………………….…
(சிங்களத்தில்/தமிழில்)

2.3. அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி :- ……………………………………………………….
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

3.0. 3.1. தேசிய அடையாள அட்டை இல.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

3.2. பிறந்த திகதி : ஆண்டு    மாதம்    திகதி

3.3. 2026.03.06ஆந் திகதியில் வயது,

வருடங்கள்    மாதங்கள்    நாட்கள்

4.0. கல்வித்தகைமைகள் :

4.1. க.பொ.த (சா/த) பரீட்சை பற்றிய விபரம் :

i. பரீட்சையின் வருடம் :………………………
ii. பரீட்சை சுட்டிலக்கம் :………………………
iii. பெறுபேறு :

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

4.2. க.பொ.த (உ/த) பரீட்சை பற்றிய விபரம் :

i. பரீட்சையின் வருடம் :………………………
ii. பரீட்சை சுட்டிலக்கம் :………………………
iii. பெறுபேறு :………………………

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| 1. | | 3. | |
| 2. | | 4. | |

4.3. வேறு தகைமைகள்
i. நிறுவனத்தின் பெயர் : ……………………………………………………………………………………
ii. தகைமைகள் : ……………………………………………………………………………………
iii. தகைமைகள் பெற்ற திகதி : ……………………………………………………………………

4.4. தொழில் சார் தகைமைகள்
i. நிறுவனத்தின் பெயர் : ……………………………………………………………….
ii. டிப்ளோமா / தகைமைகள் : ……………………………………………………………………
iii. டிப்ளோமா / தகைமைகள் பெற்ற திகதி : ……………………………………………………

5.0. நீங்கள் இலங்கை நீதிமன்றம் ஒன்றில் எப்போதாவது குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா?
அவ்வாறெனின் விபரத்தைக் குறிப்பிடுக: …………………………………………………………………….
……………………………………………………………………………………………………………

6.0. அரச / கிழக்கு மாகாண பொதுச்சேவையை சேர்ந்தவராயின்,
6.1. திணைக்களம் / அலுவலகம் : ……………………………………………………………………….
6.2 தற்போதைய பதவி : ……………………………………………………………………………
6.3. முதல் நியமனத் திகதி : ……………………………………………………………………
6.4. இச்சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி : …………………………………………………

7.0. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட (தெளிவான விபரங்களுடன்) பற்றுச்சீட்டினை உரிய கூட்டினுள் கழராதவாறு இங்கு ஒட்டவும் தொடர்பான விபரங்கள.

| **பற்றுச்சீட்டு மூலப்பிரதியினை கழராதவாறு இங்கு ஒட்டவும்** |
|---|

8.0. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**
(அ) இவ்விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்தி செய்யப்படாததன் அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாகச் சேர்க்கப்பட்டுள்ளதன் விளைவாக ஏற்படக்கூடிய ஏதாவது இழப்பை நான் ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்றேன். மேலும் இங்கு அனைத்து பகுதிகளையும் சரியாக பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.
(ஆ) என்னால் செய்யப்பட்ட இக்கூற்று பொய்யானவை எனத் தெரியவந்தால் நியமனத்திற்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.
(இ) மேலும் இப்பரீட்சை நடாத்துதல் தொடர்பாக கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைந்தொழுகுவேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.
(ஈ) இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் எதனையும் பின்னராக மாற்றம் செய்யமாட்டேன்.

……..…...……………………
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி : ……………………

9.0. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :** (இவ்வறிவித்தலின் 5.3 இன்படி)
இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு/திருமதி/செல்வி ……………………………….. என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் ……………………………. ஆந் திகதியில் இட்டார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………………
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரது கையொப்பம்.

திகதி :………………………

கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் முழுப் பெயர் :…………………………….
பதவி :…………………………………………………….
முகவரி :…………………………………………………….
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

10.0 **திணைக்களத் தலைவரின் உறுதியுரை:** (அரச/கிழக்கு மாகாண பொதுச்சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கானது)
இத்திணைக்களத்தில் நிரந்தர உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு/திருமதி/செல்வி …............................................. அவர்களின் விண்ணப்பத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கின்றேன். அவர் விண்ணப்பித்துள்ள பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து அவரை அப்பதவிக்கு விடுவிக்க முடியும் / முடியாது என்பதையும் இங்கு அவரால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் யாவும் சரியானவை என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………………
திணைக்களத்தலைவரின் கையொப்பம்

திகதி : …………………………………………………….
முழுப் பெயர் : …………………………………………………….
பதவி : …………………………………………………….
முகவரி :…………………………………………………….
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)